**செய்தி வெளியீடு எண்: 116/2023** **நாள்: 21.10.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**ஒரே நாளில் சென்னை மெட்ரோ இரயில்களில் 3.60 லட்சம் பேர் பயணித்தார்கள்**

ஆயுத பூஜை மற்றும் சரஸ்வதி பூஜை தொடர் விடுமுறையை முன்னிட்டு சொந்த ஊருக்கு செல்லும் மெட்ரோ இரயில் பயணிகளின் வசதிகாக மாலை நெரிசல்மிகு நேரத்தில் இயக்கப்பட்டு வரும் மெட்ரோ இரயில் சேவை, 20.10.2023 மற்றும் 21.10.2023 ஆகிய தேதிகளில் இரவு 10:00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 19.10.2023 அன்று 3,43,922 பயணிகளும், 20.10.2023 அன்று இதுவரை இல்லாத அளவில் 3,60,743 பயணிகளும் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். இந்த பயணிகளின் எண்ணிக்கை மெட்ரோ இரயில் சேவை தொடங்கியதில் இருந்து இதுநாள் வரையிலான எண்ணிக்கையில் இதுவே அதிக எண்ணிக்கை என்றும் மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதில் அதிகபட்சமாக புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் 28,021 பயணிகளும், கிண்டி மெட்ரோ இரயில் நிலையத்தில் 20,423 பயணிகளும், திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் 18,375 பயணிகளும், விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் 18,113 பயணிகளும் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் க்யுஆர் குறியீடு (OR Code) பயணச்சீட்டு, பயண அட்டைகள் (Travel Card), வாட்ஸ்அப் டிக்கெட் மற்றும் Paytm App போன்ற அனைத்து வகையாக பயணச்சீட்டுகளுக்கும் 20% கட்டணத் தள்ளுபடி வழங்குகிறது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் வாட்ஸ்அப் டிக்கெட் (+91 83000 86000) மூலமாக மற்றும் Paytm App மூலமாகவும் பயணிகள் தங்கள் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்யலாம்.

மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை சுத்தமாவும். சுகாதாரமாகவும் பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**